031m211,N82
N31-29.9
199638

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

17 NOV 1931

தொகுதி—உகூ] பிரஜோத்பத்தி௵ ஆடிமீ [பகுதி-கூ.
Vol. XXIX. *July–August–1931.* No. 9.

உள்ளுறை.

கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப்புலவர்கள்:—	ஸ்ரீமத். T. V. சதாசிவபண்டாரத்தார்	உகக
சங்கநூல்களும் கம்பரும்:—	„ பண்டித, ரா. இம்மப்பையர்	உகஎ
புறநானூற்றுக் குறிப்பு:—	„ P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M.A., Ph.D.L.T.	கூ0எ
பரிசோதனைத்தொடர்:—	T. K. இராமாநுஜையங்கார் உதவிப்பத்திராசிரியர்,	கூகரு
பாப் பரிசிலைப்:— பரிபாடல், விஷய சூசிகைகளுடன்	ஷை	சுகூ—சுகூ

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷமொன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1931.

Printed by Srimathu RAJA M. DINAKARA BAHADUR AVL., and published by THIRU. NARAYANA IYENGAR, at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாரால் சமீபத்தில் அச்சிட்டு விற்பனைக்குச் சித்தம் செய்துவைக்கப்பட்டுள்ள புத்தகங்களின் விலை முதலிய விவரக்குறிப்பு:—

1.	வைத்தியசாரசங்கிரகம் (இரண்டாம்பதிப்பு)	ரூ.	5—0—0
2.	மாறனலங்காரம்	,,	4—8—0
3.	வில்லிபாரதம்	,,	4—0—0
4.	அகப்பொருள்விளக்கம்	,,	1—4—0
5.	திருவாரூருலா.	,,	0—8—0
6.	திணைமாலை நூற்றைம்பது.	,,	0—8—0
7.	சேதுநாடுந் தமிழும்.	,,	0—6—0
8.	பொருளதிகார ஆராய்ச்சி.	,,	1—4—0
9.	கூடற்புராணம் (முதற்பதிப்பு)		0-10-0
10.	மதுரைத்திருப்பணிமாலை (மூன்றும்பதிப்பு)		0—8—0
11.	பன்னூற்றிரட்டு (நான்காம்பதிப்பு)		3—0—0
12.	அரும்பொருள்விளக்க நிகண்டு (முதற்பதிப்பு)		1—4—0

தபாற்கூலி வேறு. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

7 NOV 1931

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உகூ.] பிரஜோத்பத்தி௵ ஆடி௴ [பகுதி-கூ.

Vol. XXIX. *July-August-1931.* No. 9.

கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப்புலவர்கள்.

நம் நாட்டில் எடுப்பிக்கப்பெற்ற திருக்கோயில்கள் பலவாகும். அவற்றுள், சில பிறவேந்தர்களது படையெழுச்சியினாலும் வேறு காரணங்களாலும் அழிந்தொழிந்தன. ஆயினும், எஞ்சியுள்ள திருக்கோயில்கள் இன்றும் நிலைபேறுடையனவாகி நம் தமிழ்மக்களது பண்டைச் சிற்பவன்மையை இனிது விளக்கும் கலங்கரைவிளக்குகள் என்று புகழுமாறு நிலவுகின்றன. பழைய தமிழ்வேந்தர்களான சேர சோழ பாண்டியர்களது ஆட்சிக்காலங்களிற் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களையும் பிற கல்வெட்டுக்களையும் இத்திருக்கோயில்களில் நாம் இன்றுங் காணலாம். இக்கல்வெட்டுக்களால் உணரப்படும் அரிய பெரிய பழைய செய்திகள் எத்துணையோ பலவாம். இவற்றுள், சில புலவர்களைப்பற்றிய செய்திகளும் உள்ளன. இப்புலவர்கள் கல்வெட்டுக்களாலன்றி வேறு வகையில் நம்மனோரால் அறியப்படாதவர்களாயிருத்தலின் இன்னோரைப்பற்றிய வரலாற்றைக் கல்வெட்டுக்களிற் கண்டவளவு அடியிற் குறிக்கின்றேன்.

1 உத்தண்ட வேலாயுத பாரதி:—இவர் தொண்டைமண்டலத்திற் காலியூர்க்கோட்டத்திலுள்ள உத்தரமேரூரைச்சார்ந்த மஹிபால குலகால சேரியில் வதிந்தவர்; வீரவல்லித்தேவராசபட்டர், காசிநாதர், குப்பையன் என்றும் வழங்கப்பட்டவர்; அந்தணர் குலத்தினர்; திருநாவுக்கரைய தேவருக்குச் சூலைநோய்தீர்த்தருளிய திருவதிகை வீரட்டான

முடைய மாதேவர்மீது ஒரு கலம்பகம் பாடியவர். இவர் இக்கலம்பகம் பாடியமைக்காகச் சகம் 1458 ஆம் ஆண்டு துன்முகியில் ஆடித்திங்கள் 10 ஆம் நாளில் திருவதிகைக் கோட்டைக்குள் அந்தணர்வீதியில் ஒரு வீடும் புன்செயில் ஒருமாவும் நன்செயில் இரண்டுமாவும் இவருக்குப் பரிசிலாக அளிக்கப்பெற்றுள்ளன. இது நிகழ்ந்தது கி. பி. 1536-ஆம் ஆண்டாதலின் இவர் பதினாறும்நூற்றாண்டின் இடையில்வாழ்ந்த தமிழ்ப்புலவர் ஆவர். இச்செய்திகள் திருவதிகையிலுள்ள திருக்கோயிலில் வரையப்பெற்றுள்ளன. (Inscription No. 376 of the Madras Epigraphist's collections for the year 1921)

2. கோடிக்கோண்டான் பெரியான் ஆதிச்சதேவன்:-இவர் பாண்டிநாட்டிற் சிறுபெருச்சியூரில் விளங்கிய புலவர் ஆவர்; கண்டன் உதயஞ்செய்தான் என்ற பாண்டிநாட்டுத்தலைவன்மீது பிள்ளைத்தமிழ் இயற்றி அவனாற் சாத்தனேரி என்ற ஊரில் அளிக்கப்பெற்ற நிலங்களைப் பரிசிலாகப்பெற்று வாழ்ந்தவர். இவர் இந்நூலை இயற்றிப் பரிசில்பெற்றது கி. பி 1230 ஆம் ஆண்டாகும் என்று இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூர்த் தாலூகாவிலுள்ள பெருச்சிக்கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Ins. No. 75 of 1924.) ஆகவே இவர் கி. பி. பதின்மூன்றும்நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய புலவர் ஆவர். கண்டன் உதயஞ்செய்தான் என்னும் தலைவன் இப்புலவரை 'நமது புலவர்' என்று மிகவும் பாராட்டியிருத்தலால் இவர் அவனது அவைக்களப்புலவராக இருந்திருத்தல்வேண்டும்.

3. காராணை விழுப்பரையன்:-இவர் பாண்டிநாட்டில் மதுரைமாநகரில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் ஆவர்; கி. பி. 1216 முதல் கி. பி. 1238 வரையிற் பாண்டிநாட்டில் ஆட்சிபுரிந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனது அவைக்களப் புலவராக வீற்றிருந்து பெருமை எய்தியவர்; எனவே கி. பி. பதின்மூன்றும்நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவராதல் வேண்டும். இவர் மேற்கூறிய 'பெரியான் ஆதிச்சதேவன்' என்ற புலவருக்கு உற்ற நண்பராயிருந்தனரென்று பெருச்சிக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Ins. No. 75 of 1924.)

4. கவிராயர் ஈசுவர சிவஉடையார்:—இப்புலவர் களர் என்ற ஊரினர்; முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குத் திறைசெலுத்திவந்த பாண்டிநாட்டுக் குறுநிலமன்னர்களுள் ஒருவனாகிய திருக்கானப்பேருடையான் மழவச்சக்கரவர்த்திக்குத் தமிழாசிரியராக விளங்கியவர். இவருக்கு விளக்கனிநல்லூர் என்ற ஊர் இத்தலைவனால் முற்றூட்டாகக் கி. பி. 1236 ஆம் ஆண்டில் அளிக்கப்பெற்றது என்பது திருப்பத்தூர்த் தாலூகாவில் வாணமனைச்சிறுவயல் என்ற ஊரிலுள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. ஆகவே இப்புலவரும் பதின்மூன்றும் நூற்றாண்டில் இருந்தவர் என்பது நன்கு புலப்படுகின்றது. (Ins. No. 47. of 1924.

5. காசிக்கலியன் கவிராயன்:—இவர் திருநெல்வேலிஜில்லாவிலுள்ள தென்காசியில் வாழ்ந்த ஒரு புலவர் ஆவர்; கலி 4689 ஆம் ஆண்டில் தென்காசியில் முடிசூடிக்கொண்ட வீரபாண்டியன்மீது முடிசூட்டுமங்கலநாளில் நாண்மங்கலம், குடைமங்கலம், வாண்மங்கலம் இவற்றைப் பாடி அரசனைப் பெருமையுறச்செய்தனர். இச்செய்தி தென்காசியிலுள்ள கோயிற் கோபுரத்தில் வரையப்பெற்றுள்ளது. அன்றியும்,

> "கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
> மற்றடந்தோள் வெல்வீர மாறனுக்குச்—சொற்புனைந்தான்
> நாண்மங் கலமும் நவிற்றுகுடை மங்கலமும்
> வாண்மங் கலமும் வகுத்து."

என்னும் வெண்பாவினாலும் இனிது உணரப்படுகின்றது. இப்புலவர், வீரபாண்டியனது முடிசூட்டுமங்கலநாளிற் பாடிய பாடல்கள் தென்காசியிலுள்ள விசுவநாதசுவாமி திருக்கோயிலிற் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடியிற் காண்க.

நாண்மங்கலம்.

> சீர்கொண்ட செங்கமலை வாழத் தரையாடைப்
> பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
> கானுலா மாலைக் கனகமகு டம்புனைந்தான்
> மானவே லானபிரா மன்.

குடைமங்கலம்.

சேணுலவு வெண்டிங்கட் செல்வனைத் தண்ணென்று
நீணிலமோ ரேழும் நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

வாண்மங்கலம்.

பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றஞ்சடையன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

வீரபாண்டியன் முடிசூடியகாலம்.

நண்புற் றெதிர்ந்தகலி காலா பிரத்தறுநூற்
றெண்பத்தொன் பானி விருங்கடல்சூழ்—மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன்.

நாண்மங்கலம், குடைமங்கலம், வாண்மங்கலம் இவற்றின் இலக்கணங்களைத் தொல்காப்பியம் புறத்திணையியலிலுள்ள 'தாவினல்லிசை' என்னும் சூத்திரத்தினுல் நன்கறியலாம். வீரபாண்டியனைப் பாடியுள்ள இப்புலவர் கி. பி. பதினூறும் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் ஆவர். (Inscription No. 10 of the Travancore Archæological series Vol. I)

6. வீராண்ட பல்லவரையர்:— இவர் மூன்றாங்குலோத்துங்க சோழனது அவைக்களப்புலவருள் ஒருவர். இவரது வேண்டுகோளால் காளவிநோத நிருத்த பேரையன் என்பான் திருக்கடவூர்ச் சிவாலயத்திற்கு கட்டுவாசிலாக அரசனால் நிமனஞ் செய்யப்பெற்றான். இஃது இக்குலோத்துங்கசோழனது ஆட்சியின் 23-ஆம் ஆண்டாகிய கி. பி. 1201-ல் நிகழ்ந்தது. எனவே, இப்புலவர் பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல்வேண்டும். இச்செய்தி திருக்கடவூரிலுள்ள ஒரு கல்வெட்டாற் புலப்படுகின்றது. (Inscription No. 255 of 1925).

7. பெருநம்பி:— இவர் தொண்டைமண்டலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த சிறந்த தமிழ்ப்புலவர் ஆவர். இயல், இசை, நாடகங்களாகிய முத்தமிழிலும் வல்லவர்; கடைச்சங்கப்புலவராகிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் மரபில் தோன்றியவர்; பொய்யாமொழிமங்கலம் என்ற ஊரை முற்றூட்டாகப் பெற்றவர். இவரது வரலாறு திருக்கச்சூர் ஆலக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகின்றது. (Inscription No. 301 of 1909).

8. பாச்சில்வேள் நம்பன்:—இப்புலவரது இயற்பெயர் நம்பன் என்பது. இவர் சோழமண்டலத்தில் மழநாட்டிலுள்ள திருப்பாச்சிலாச்சிராமம் என்ற நகரத்தின் தலைவர். இவர் சுவரன்மாறனாகிய இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனைப் பாடிய புலவர்களுள் ஒருவர். இம் முத்தரையன் திருக்காட்டுப்பள்ளியின் பக்கத்திலுள்ள நியமம் என்ற ஊரில் ஒரு பிடாரியார்கோயிலெடுப்பித்து அக்கோயிலிலுள்ள தூண்களில் தன்மீது பாடப்பெற்ற பல பாடல்களையும் அவற்றைப் பாடிய புலவர்களது பெயர்களையும் பொறித்துள்ளான்.

அக்கோயில் இடிந்தபின்னர் அதிலிருந்த கற்களையும் தூண்களையும் கொணர்ந்து திருக்காட்டுப்பள்ளிக்கு அண்மையில் இரண்டு மைல் தூரத்திலுள்ள செந்தலை என்று தற்காலத்து வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்தில் ஒரு சிவாலயம் அமைத்துள்ளனர். இதில் நமது புலவராகிய பாச்சில்வேள் நம்பன் என்பார் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்களெல்லாம் கட்டளைக்கலித்துறைகளாகவும் வெண்பாக்களாகவும் இருக்கின்றன; இவற்றுள் சில அடிகளும் சீர்களும் சிதைந்துள்ளன. காலஞ்சென்ற திரு. கோபிநாதராயர் அவர்கள், M.A., இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தவன் என்று கூறியுள்ளனர். (செந்தமிழ்—தொகுதி—6 பக்கம் 10). எனவே, இவ்வேந்தனைப் பாடியுள்ள புலவராகிய பாச்சில்வேள் நம்பன் என்பவரும் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல்வேண்டும்.

9. ஆசிரியர் அநிருத்தர்:—இப் புலவர்பெருமானும் மேற்கூறிய பெரும்பிடுகுமுத்தரையனைப் புகழ்ந்து பாடியவருள் ஒருவராவர். இவரது பாடல்களும் செந்தலையிலுள்ள சிவாலயத்திற் பொறிக்கப்பட்டுள்ளன. இவரது ஊர் முதலான பிறசெய்திகள் புலப்படவில்லை.

10. கோட்டாற்று இளம்பெருமானார்:—இவர் கோட்டாறு என்ற ஊரில் வாழ்ந்த புலவர்போலும். இவரும் பெரும்பிடுகுமுத்தரையனைப் பாடியவர். இவரது பாடல்கள் செந்தலைச் சிவாலயத் தூண்களில் உள்ளன.

11. அமருண்ணிலையாயின குவாவங்காஞ்சன்:—இப்புலவர் சோழமண்டலத்துக் கிழார்க்கூற்றத்திலுள்ள பவதாயமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்தவர். பெரும்பிடுகுமுத்தரையனைப் பாடியவருள் இவரும் ஒருவர் ஆவர். இவர் அவ்வேந்தன்மீது பாடிய பாடல்கள் செந்தலைக் கோயிலிலுள்ள தூண்களில் வரையப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் அநிருத்தர், கோட்டாற்று இளம்பெருமானார் அமருண்ணிலையாயின குவாவங்காஞ்சன் ஆகிய இப்புலவர்கள் எல்லோரும் பெரும்பிடுகுமுத்தரையன் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்கள் என்பது ஒருதலை. இனி, இவர்கள் பாடிய பாடல்களுட் சிலவற்றை அடியிற் காண்க.

ஏறி விசும்பு மிருநிலமாய்த் தென்பவால்
மாறன் செருவேன் மறங்கனன்று—சீறக்
கொடிமாடத் தண்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு. (அமருண்ணிலை பாடியது)

எண்கி னிருங்கிளையு மேறற் கரியவே
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
சேணுடு தாழ்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோநாடர் புக்கொளித்த குன்று. ஷை.

வெங்கட் பொருக (ளஞ்) சேர் வெல்கொடியோன் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க—அங்குலந்தார்
தோழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊழுந்தி யூரென்னு மூர். (பாச்சில்வேள் நம்பன் பாடியது.)

T. V. சதாசிவபண்டாரத்தார்,
Tamil pandit,
வாணாதுறை ஹைஸ்கூல்,
கும்பகோணம்.

சங்க நூல்களும் கம்பரும்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் கல்வித்தெய்வமாகிய கலைமகளின் நிறையருளை முற்றும்பெற்ற அருட்கவியாயினும், அவர் காலத்து விளங்கிய வடமொழி நூல்களினும் சங்கநூல்களினும் விடயங்களை நுணுகி யாய்ந்து, அவ்வந்நூல்களிலுள்ள கருத்துக்களை ஆங்காங்குச் சந்தர்ப்பத்துக்கேற்பத் தாம் பாடிய இராமாயணமென்னும் அரிய பெரிய காப்பியத்தின்கண் திருத்தமாக வமைத்துள்ளாரென்பது அவரது நூலைச் செவ்விதினாய்ந்துணர்ந்த சீரிய புலவரது அநுபவசித்தமாகும். இதற் கெடுத்துக்காட்டாகச் சங்கநூல் மேற்கோள்களை யியன்றவரை யுதாகரித்து, அவற்றுக் கிணங்கவும் மேலாகவும் நம் கவிஞர்பெருமான் தம் கருத்துக்களைச் சொல்லிப் போன விவரங்களை நிரலே யெடுத்துக்காட்டுவாம்.

"புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்
மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்"

என்பது புறப்பாட்டு.

இதற்கு, 'ஈன்றணிமைபொருந்தி அது தீர்ந்த குழவிக்குச் சுரக்கு முலைபோல, நீர்மிக்க காவிரியினது கரைமரத்தைச்சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழநாட்டையுடைய வேந்தன்' என்பது பழையவுரை.

சரயுநதியின்வருணனைக் குறிக்கவந்த கம்பர் இப்புறப்பாட்டின் கருத்தையமைத்து,

'இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்'

என வெகு அழகாக நயங்கள் பலவமையப் புனைந்துரைத்தனர்,

சீவகசிந்தாமணியில் ஏமாங்கதநாட்டை வருணித்த திருத்தக்க தேவர் அவ்வேமாங்கதமென்னும் நாடு, 'வெற்றியையுடைய தனதின்பத்தை உலகை விரும்பப்பண்ணுதற்கு விண்மகிழ்ந்து வீழ்ந்ததென்னும்படி தன்னையொழிந்த நாடு தனக்கு எல்லையாகவைகும், அது வீடுபெறத் தவஞ்செய்வார்க்கு இடம், மறுமைகருதி இல்லறநடாத்துவார்க்கும் இடம்; அது நற்பொருளைப்பயக்குங் கல்வியைக் கற்பார்க்கிடம், நிலையாத பொருளைத் தேடுவார்க்குமிடம்' என்ற பொருளமைய,

'நற்றவஞ்செய் வார்க்கிடம், தவஞ்செய் வார்க்கு மஃதிடம்,
நற்பொருள்செய் வார்க்கிடம், பொருள்செய்வார்க்கு மஃதிடம்,
வெற்றவின்பம் விழைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமாக வைகுமற்ற நாடரோ'

என்று நன்கு வருணித்தனர்.

'செவ்விய மதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரியதீஞ்சொல்
வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது வரம்பில்
எவ்வுல கத்தோ ரியாவரும் தவஞ்செய் தேவரா தரிக்கின்ற
அவ்வுல கத்தோ ரிழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்'

என்று அயோத்திநகரைப்பற்றிக் கம்பர் அலங்கரித்துப்பாடினர்.

ஏமாங்கதநாடு, விண்ணுலகம் மகிழ்ச்சிகொண்டு பூவுலகின்கண் வீழ்ந்ததென்னும்படி விளங்கிற்றென்றும், அதற்குக் காரணம், மண்ணுலகத்திலும் அதிகமாகத் தன்னிடத்திருந்த வெற்றியையுடைய இன்பத்தை மண்ணுலகங்கண்டு விரும்புதற்காகவே. எனவுங் கூறிப்போயினர் திருத்தக்கதேவர்.

எவ்வுலகங்களிலுமுள்ளவர்கள் தவத்தைச்செய்து பெறவிரும்புதற்குரியது மோட்ச உலகமென்றும், அது பிறவாநெறியுற்ற நிலையுடையதாகலின் நிரதிசயவின்பத்துக்குரியதாமென்றும், அதனையடைந்தார் எவ்வாற்றானும் பாசநிலைகெழீஇய இம்மண்ணுலகை மறந்துங் கனவிலு நினையாரென்றுங் கூறப்படுவதே முத்தியுலகமாண்பாம்; என்றாலும் அம்மோட்சலோகத்திலுள்ளவர்களும் இழிந்துவந்து வசிப்பதற்குப் பேராசையுண்டுபண்ணுகின்றது அயோத்திமாநகரம் என்று வருணித்த நம் கவிச்சக்ரவர்த்தியாரது அரியபெரிய புலமைத்திறத்தை என்னென்றுரைப்பது? வீட்டுலகிலுள்ளாரே வர விழைவுகொள்கின்றனரெனின், ஏனையுலகின்கணுள்ளார் வரவிரும்புதலைச் செப்புதலும் வேண்டுமோ? இதனானே இராமபிரானிருக்குமிடமே மோட்ச உலகமென்பதூஉம், அவதாரவிசேடமாய அப்பிரானே பரதத்துவமான பெருந்தெய்வமென்பதூஉம், நன்குவிளங்குகின்றனவன்றோ?

மண்ணுலகிலுள்ளார் காமியமாகவும், நிஷ்காமியமாகவும் வினைகளையியற்றிச் சுவர்க்க இன்பத்தையும் மோக்ஷசுகத்தையும் பெறுவதியற்கையாமே தவிர, மேலுலகிலுள்ளார் தவவினையியற்றிப் பூவுலகு போதரல் என்றுமில்லாத வழக்கமாகும். இஃது ஏனைநகரங்கட்கொத்ததாயினும், இவ்வயோத்தியைநோக்கச் சிறிதும் ஏலாதென்றும், முத்தியுலகத்தாரும் ஏனையுலகினரும் அவசியம் இதனைக்காணின், போதருவாரெனவும் சமத்காரமாகக் கூறிய கம்பரதேரானை அனைவராலும் பெருமிதந்தோன்றக் கொண்டாடற்பாலதாமென்க.

சிந்தாமணிக்கவியில் விண்போதாலால் மண்ணுலகிற்கு மாண்பெய்துவது என்ற கருத்தைத் தொனிக்கின்றது; அதற்கு முற்றும் மாறான கொள்கை கம்பர்கவியிற் காணப்படுகின்றது. இங்ஙனஞ் சிந்தாமணி மேற்கோளை யெடுத்துக்கொண்டு அதனினும் பன்மடங்கு விழுமிதாகவும் சமத்காரமாகவும் கூறிய கம்பரது கவிநயம் நோக்கி நோக்கி வியத்தற்குரியது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடுபேறுநிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி மாங்குடி மருதனார் பாடியருளிய மதுரைக்காஞ்சியென்னும் நூல் பத்துப்பாட்டினுள் ஒன்றாகும். இஃது, அப்பாண்டியனுடைய முன்னோர்களின் பெருமையையும் பாண்டியநாட்டின் ஐந்திணைவளங்களையும், மதுரையின் வனப்பையும் அப்பாண்டியனுடைய வீரமுதலியவற்றையும் கூறும். மற்று மிந்நூலிற் சேரவேந்தனது நாளோலக்கச்சிறப்பும் பல சிற்றரசர்களுடைய பெருமைகளும் கூறப்பட்டுள்ளன. பாண்டியனுடைய வீரச்சிறப்பைச் சொல்லவந்த இடத்திலே,

*"முழங்குகடல் ஏணி மலர்தலை யுலகமொடு
உயர்ந்த தேஎத்து விழுமியோர் வரினும்
பகைவர்க் கஞ்சிப் பணிந்தொழு கலையே"

எனப் பொருமிதந்தோன்றக் கூறினர், நீர்கவிப்புலவராம் மாங்குடி மருதனார். இதனானே விண் மண் என்ற இரண்டுலகங்களிலும்வசிக்கின்ற வீரராலும் சிறிதும் அஞ்சுதற்கேதுவாகாத மனோதிடம் படைத்தவன் பாண்டியனென்பதும் அவன் அவ்விருதிறத்தாரையும் வெற்றிகொள்ளும் பான்மையுடையானென்பதும் பெறக்கிடக்கின்றன.

விசுவாமித்திரர் தமது வேள்வியைக் காக்கும்பொருட்டு இராமபிரானை யனுப்பவேண்டுமெனத் தசரதவேந்தனிடத்துத் தம் கருத்தைத் தெரிவித்தபோது, வேந்தன் பெரிதும் துயரமுற்றுக் கவலைக்கடலுண் மூழ்கிப் பின்னரொருவாற்றாற்றேறி, முனிவரைநோக்கி 'இராமன் சிறியவன், படைக்கலப்பயிற்சி நன்கு திருந்தப்பெறாதவன்; வேள்விகாத்தலாகிய இஃதொன்றே நுமது கட்டளையாயின் தேவரோ யெதிர்த்துவந்திடையூறியற்றினும் அவைகட் கிடையூறாக யான் காப்பேன்; ஆலசியம் செய்யாது உடனே புறப்படுக'வெனக் கூறினான் என்ற சந்தர்ப்பத்திலே கவிஞர்தலைவர் கம்பநாடர்,

'தொடையூற்றத் தேன் றுளிக்கு நறுந்தாரான்
ஒருவண்ணந் துயர் நீங்கிப்
படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரியோய்
பணியிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானு நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூறா யான்காப்பென்
பெருவேள்விக் கெழுக வென்றான்'

எனக் கூறிப்போயினர்.

---

*'முழங்கு கடலாகிய எல்லையையுடைய அகன்ற இடத்தையுடைய உலகத்தவர்களுடனே உயர்ந்த தேவருலகத்துத் தேவரும் பகைவராய் வரினும் பகைவருக்கு அஞ்சித் தாழ்ந்து ஒழுகலைச் செய்யாய்,' (மதுரைக்காஞ்சி, நச். உரை.)

மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனார், தேவர்களையெதிர்த்துவரினும், பாண்டியனை அஞ்சிப் பணிந்தொழுகுபவனல்லன் எனக்கூறினாராயினும், பாண்டியனுக்குப்பகையாய் அப்புத்தேளிர் எதிர்த்துவாற்குக் காரணங் குறிப்பான் அறியுமாறு கூறிப்போயினர்.

பகீரதனது விடாமுயற்சிக்கும் பெருந்தவத்திற்கும் மனமிக விரங்கிச் சிவபெருமான் கங்காநதியைப் புவியிற் போதரச் செய்தாராயினும், அந்நதி பல நிலங்களின்வழியாகப் பெருக்கெடுத்துப்பாய்ந்தோடுதலால், ஆங்காங்குத் தழைக்குடில்கள் பல வேய்ந்துகொண்டு தவமியற்றும் முனிவர்கட்கு முதற்கண் சிறிது இடையூறுயமையுமெண்க; கௌசிகரும் அவருளொருவராகலான் இத்தகையசெயலாற் சிவபிரான் அவர்க்குப் பகைவராதல்கூடும். திரிசங்குவேந்தன் உடலுடனே, சுவர்க்கலோகம் புக முயன்று செய்த செய்தியைக் கிளத்தும் வரலாற்றினின்று பிரமதேவனும் இந்திரனும் விசுவாமித்திரருக்கு விரோதமாதல் பெறப்படும். தமது தபோபலத்தால் திரிசங்குவை விமானமேற்றிப் பொன்னுலகத்துய்க்கப் பின்னர்த் தேவர்களாற் றள்ளுண்டு புவிக்கணிழிந்த திரிசங்குவின்நிலையைக்கண்ட முனிவர் வெகுளிமேற்கொண்டு வேறுலகைப் படைத்திடுவேன்; வேறு பிரமேந்திராதிகளையும் ஏனைய தேவர்களையுஞ் சிருட்டிப்பேனென வீரமொழிகள் புகன்று சிலவற்றைப் படைக்கவுந் தொடங்கவே, சிவபிரான் திருமாலாதிய அனைவோரும் முனிவரைபணிந்து, 'நம்மைப் புகல்புகுந்தோனை நீவிர் காக்குந்திறம் நன்று! நன்று!! இனிச் சிருட்டியையொழிக' எனக் கூறவே, இந்திரன் முதலிய தேவர்கள், 'ஐந்து நட்சத்திரங்கள் தென்பால்வந்து நும்புரைவிளக்கிடுக' வெனக் கூறிப்போயினரென்பது வரலாறு. இதனானே, சிவபிரான், இந்திரன், பிரமன் முதலாயினோர் விசுவாமித்திரரது தவவேள்விக்கு இடையூறியற்றத்தக்க காரணங்கள் கொண்டவரென்பதைக் கம்பநாட்டாழ்வார்கூற்றினும் குறிப்பானும் அறியுமாறு நிறுவிப்போயினரென்றவிடயம் தெள்ளிதிற் புலனாகும்.

இங்ஙனம் முன்னோர் கருத்துக்களைத் தழுவுவரேனும் அவற்றை நயம்படக் காரணங்காட்டிப் புனைந்துரைப்பது இயல்பிலேயே இவர்க் கமைந்த ஒப்புயர்வற்ற பேராற்றலாகும் என்க.

இராமபிரானது வல்லமையை வருணிக்கும்போதும் இங்ஙனம் மறவாமற் கூறுவது இவர்க் கியல்பேயாம்.

'சூரறுத்தவ னுஞ்சுடர் நேமியும்
ஊரறுத்த வொருவனு மோம்பினும்
ஆரறத்தினொ டன்றிநின் றாரவர்
வேரறுப்பென் வெருவன்மி னீரென்றான்'

தருமத்தோடு பொருந்துதலின்றி, அதருமத்தோடுபொருந்திநின்றவர்கள் யாவரோ அவர்களையெல்லாம் சூரனைச்சேதித்த சுப்பிரமணியக் கடவுளும் விளங்குகின்ற சக்கரப்படையையுடைய விஷ்ணுமூர்த்தியும் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் ஒருங்கே சேர்ந்து பாதுகாப்ப முன்வருவார்களாயினும் அவர்களையும் பொருட்படுத்தாது புறங்கண்டு வேரோடு களைந்துவிடுவேன், நீவிர் சிறிது மஞ்சற்க; வெனத் தண்டகாரணிய முனிவர்க் கபயங்கூறிய ஸ்ரீராம மூர்த்தியினது ஆற்றலை யழகுற வமைத்துக் கூறினர்.

'புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப'

என்பது புறநானூறு.

'புலி பாதுகாக்குங் குட்டிபோலக் குறைவில்லாத செவ்விய கோலால் நீ பாதுகாப்ப' என்பது இதன் பழையவுரை. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை இடைக்காடனார் பாடியபோது இங்ஙனங் கூறினர்.

இராமலக்ஷ்மணரால் அங்கபங்கம் நிகழ்ந்தபோது, சூர்ப்பணகை,

'புலிதானே புறத்ததாக் குட்டிக்கோட் படாதென்ன
ஒலியாழி யுலகுரைக்கு முரைபொய்யோ? ஊழியினும்
சலியாத மூவர்க்கும் வானவர்க்குந் தானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ'

என்று இராவணனை நோக்கி முறையிடுவாளாயினள். கற்பாந்தகாலத்திலும் நிலைகுலையாத திரிமூர்த்திகளுக்கும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மேம்பட்ட வலிமையுடையவனே! தாய்ப்புலி பின்னேயிருக்க அதன் குட்டி யாவராலும் பிடித்து வருத்தமடைவிக்கப்படாது என்று ஒலியையுடைய கடல்சூழ்ந்த உலகத்திலுள்ளார் கூறுகிற வார்த்தை பொய்யாமோ? நான் அடைந்த கொடுநோவைப் பார்க்க வாமாட்டாயோ? என்பது, இதன் பொருள்.

'புலிதானே புறத்தாகக் குட்டி கோட்படாது' என்ற வாக்கியம் உபமானத்தால் உபமேயத்தை விளக்கும் 'பிறிது மொழிதல்' லென்னும் அணியாய், வலியபெரியோர் புறத்தேயிருக்க அவரைச் சார்ந்தோர் எவராலுந் துன்புறுத்தப்படார் என்ற உபமேயத்தை விளக்கும். 'பெரிய தமயனான நீ யெனக்குப் புறங்காவலாக இருக்கையில் உன்னுடைய செல்வத்தங்கையான என்னை யிவர் வருத்தியதனால் அவ்வுரை பொய்யாயிற்றே' என்றாள்.

முற்குறித்த புறப்பாட்டின்கருத்தை யப்படியே யெடுத்துக் கொண்டு கம்பநாடர், அதனைத் தம் கருத்தாகக் கூறாமல் 'ஒலியாழி யுலகுரைக்கும் உரை' யென, ஆன்றோர்வாக்காக அமைத்துக் கூறியதும் ஈண்டைக்கு நுணுகியறிதற்பாலதொன்றாமென்க.

'மின்னூர் சிலம்பிற் சிலம்புங் குரலன்னம்' என்பது சிந்தாமணித் தொடர். மின்னலைப் போன்று ஒளிவீசும் மாதரது பாதச்சிலம்பினோசை போல், ஒலிக்கின்ற குரலையுடைய அன்னப் பறவைகள் என்பது இதன் பொருள்.

'அரங்கி னாடுவார் சிலம்பி னன்னநின்
றிரங்கு வார்புனற் சரயு வெய்தினார்'

என்றனர் கம்பநாடர்.

நர்த்தனசாலையில் நடிக்கின்ற நங்கையாது (பாதங்களி லணியப் பட்டுள்ள) சிலம்போசைபோல, அன்னப்பறவைகள் நிலைபெற்று ஒலித்தற்கிடமாகிய மிக்க நீரையுடைய சரயுநதியை இராமலக்ஷ்மண ரடைந்தனரென்பது இதிற் குறித்த பொருளாம். ஈண்டு, அன்னப்புட்க ளின் குரலொலி, மாதர் சிலம்பிசையைப்போல விருக்குமெனக் குறிக்கப் பட்ட இயற்கைவருணனையின் நயம் மிக இன்பம்பயப்பதொன்றாம்.

மணிமேகலை பத்தொன்பதாங்காதையாகிய சிறைக்கோட்ட மறக் கோட்டமாக்கியபகுதியின்கண் இரவின்வருணனையைப் புனைந்துரைக்கத் தொடங்கிய கூலவாணிகன்சாத்தனார்,

'அகல்வாய் ஞால மாரிரு ளுண்ணப்
பகலர சோட்டிப் பணையெழுந் தார்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு
நீல யானை மேலோ ரின்றிக்
காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநா றடா அஞ் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறையழி தோற்றமொடு தொடர.'

என, உருவகவணி தோன்ற வெகு அழகாக வருணித்தனர். அதன் பொழிப்புரை வருமாறு—

விரிந்த இடத்தையுடைய உலகத்தை அரிய இருளாகிய பகைவன் உட்கொள்ளும்படி, சூரியனாகிய அரசனைத் துரத்திவிட்டுத் தன்வருகை யை யாவர்க்கும் தெரிவிப்பதற்காகப் பறையென்னுங்கருவி மிக்கெழுந் தொலிக்க, அந்திக்காலமாகிய நெற்றியையும் பிறைச்சந்திரனாகிய தந்தத்தையுமுடைய கரியநிறத்தையுடைய (இராத்திரியாகிய) யானை, பாகரில்லாமல் விருப்பமாகிய துதிக்கையைநீட்டி ஏழிலைப்பாலைமரத்தி னது மலரின்மணம் நாறுகின்ற மதத்தால் அடங்காப்பெருங்களிகொண்டு காற்றைப்போலே எழுந்து தன் னிறையழிந்ததோற்றத்தோடு தொடர (அதாவது இரவுவர) என்றபடி.

பகல் கழிந்தமாத்திரத்தில் சிறிதுபொழுது அந்திக்காலமிருந்து பின்னர்ப் பிறைச்சந்திரனுடன்கூடிய இரவு தொடர்ந்துவந்ததனைப் பொருத்தமான உருவகவணிதோன்ற வருணித்திருப்பதன்மாண்பு சாலவும் பாராட்டற்குரியதொன்றாம். இதில் யானையின் மதநாற்றம் ஏழிலைப்பாலைமரத்தினது மலர்மணத்தையொத்திருக்குமென்றும் அத னால் அதனைப் பொருது யானை யம்மரத்தை யழிக்க வல்விரைந்தோடு மென்றும் ஓர் அரியசெய்தி விளங்குதல் காண்க. இம்மரம் வடமொழி யில் 'ஸப்தபர்ணம்' என்றும், 'அயுக்சதம்' என்றும் வழங்கப்படும். இம்மரம் ஒவ்வொருகாம்பிலும் எவ்வேழிலைகளையுடையது. இவ்விடய மாக நம் கம்பநாடர் கூறியிருப்பதை யினிக் கவனிப்போம்.

பாத்த யானையின் பதங்களிற் படுமத நாறக்
காத்த வங்குச நிமிர்ந்திடக் கால்பிடித் தோடிப்
பூத்த வேழிலைம் பாலையைப் பொடிப்பொடி யாகக்
காத்தி ரங்களாற் றலத்தொடுந் தேய்த்ததோர் களிறு.

"அணியணியாகப் பிரித்துள்ள யானைகளைக் கட்டிய இடங்களில் தோன்றுகின்ற மதநாற்றம்போன்ற நாற்றம் (ஏழிலைப்பாலைமரங்களி லிருந்து) வீசியதினால், (அதனைத் தாங்கமாட்டாமல்) ஓர்யானையானது (தன்னைமீறவொட்டாமல்) தடுக்கின்ற (பாகன் கையிலுள்ள) அங்குசமானது அப்பாற்போய்விடும்படி மதமணம்வந்தவழியைப் பிடித்துக்கொண்டு ஓடிப்போய், (அவ்வாறு மதமணம் வருவதற்குக் காரணமாயிருந்த) பூப் பூத்துள்ள ஏழிலைப்பாலைமரத்தை மிகச் சிறியதுளாகும்படி முன்னங் கால்களால் தரையோடு தேய்த்துவிட்டது."

தசாதன்சேனை தங்கிய சந்திரசைல மென்ற மலைச்சாரலில் ஏழிலைப்பாலைமரங்கள் பூத்திருந்ததனால், அம்மரத்தினிடத்திலிருந்து யானையின் மதமணம் போன்ற மணம் வீசியதாக, அதனையுணர்ந்து மத வெறிகொண்டு பாகனுக்கடங்காமல் அங்குசத்தையு மப்பாற்றள்ளிவிட்டு அந்த மரத்தைப் பொடிப்பொடியாக ஆகும்படி தன் முன்னங்கால்களாற்

பூமியில் ஓர் யானை தேய்த்ததென்பதாம். ஏழிலைப்பாலைமரம் பூப்பூத்த தாயின் அது மதமணங்கமழுமென்பதும், அதனால் யானை மதவெறி கொண்டு, வேறோர் மதயானையைக் கண்டால் வெறிகொண்டு அதனை யடக்குவதுபோல் அம்மரத்தை யழிக்குமென்பதும் இங் குணரத் தக்கனவாம்.

'விலக் கருங் கரிமதம் வேங்கை நாறுவ' என நகரப்படலத்தில் ஐம்பத்தெட்டாஞ் செய்யுளிற் கம்பர் கூறிய அரிய விடயமும் ஈங்கு நுணுகி யறியற்பாலதாம். (தவிர்க்கமுடியாத யானையின் மதநீர்கள் வேங்கைமரத்தின் மலர்போல வாசனை வீசுவனவாமெ்பது இதன் பொருள்)

சங்கநூற்கருத்தைத் தழுவினரேனும், ஒரு பொருளி னியற்கையை நன்கு கவனித்துப் பலபடியானும் வெவ்வேறுவமைகள் தோன்ற வருணித்திருப்பது இவர்க்கியற்கையி லமைந்துள்ள பேராற்றலைக் காட்டுவதாகும். ஏழிலைப்பாலையின் மலர்மணத்தை நிகர்க்குமென்றவர், ஈண்டு வேங்கைமலரின் மணத்தை யொத்துளதென யானைமதவியற்கையைக் கூறியிருப்பதன் நுட்பத்தைக் காண்க. வேங்கைமரம் பூத்திருக்கையில் அது புலிபோலத் தோன்ற அதுகண்ட யானைகள் அம்மரத்தைச் சார்ந்து முறித்தலினாலே யானைகளின்மதம் அம்மலர்களிற் படிந்து அவை யானைகளின் மதமணங் கமழுமென ஒரு சாரார் இதற் குரை காண்டலுமுண்டு. எனினும் முதற்கணுரைத்த உரையே இத்தொடர்க்கு முற்றும் பொருத்தமுற்ற உரையாம்.

(தொடரும்)

இங்ஙனம்,

பண்டிதர் ரா. திம்மப்ப ஐயர்,

தலைமைத்தமிழ்ப்புலவர்,

முனிசிபல்காலேஜ், சேலம்.

புறநானூற்றுக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்

ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., Ph. D., L.T.,) அவர்கள் எழுதுவது.

[௧௧௫-ம் பக்கத் தொடர்ச்சி].

8. வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
வொடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேரலாதனை
யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
யகலிரு விசும்பி னானும்
பகல் விளங் குதியாற் பல்கதிர் விரித்தே.

தனக்குரிய நாடு சிறியதாயிருப்பினுஞ் சேரமான் கடுங்கோவாழியாதன் இப்புவியிலுள்ள அரசரனைவருந் தனக்குத் திறை செலுத்தித் தன்னை வணங்குமாறு, குறைவற்ற மனத்திண்மையுடனும், முன் வைத்த காலைப் பின்வையாத் தானையுடனும் அவரை யெதிர்த்துத் தன் வசமாக்கி அரசியல்நடாத்தித் தன்னை அணுகிவந்த புலவர்பெருமக்கட்கு மிக அளித்தனன் என்றும், பகலவனும் மதியும் அகன்ற விசும்பின்கண்ணிருந்தும் எக்காலும் விளங்காமையானும், பகலினேனும் இரவினேனும் தம் கதிர்களைப் பரப்பி விளக்கிப் பின் மறைவதானும் அவ்விருவருள் எவருஞ் சேரமானுக்கு ஒவ்வார் என்றும் இச் செய்யுளிற் கூறினர் புலவர்பெருமான் கபிலர்.

சேரலாதனுக்கும் மண்டிலத்திற்குமுள்ள தன்மைகள் மூரண்படும்: அவை வருமாறு:—(1) இடஞ்சிறிதேனும் ஊக்கமொடு விளங்கினன் சேரன்; அகலிருவிசும்பின்கண்ணிருந்தும் எக்காலும் விளங்க ஊக்கமற்றுப் பகலின்கண்ணே பகலவனும், இரவின்கண்ணே மதியும் விளங்

கும். (2) போரில் முன்வைத்த காலைப் பின்வையாது பகைவரைக் கொல்லுந் தானையுடையன் சேரன்; பகலிறுதியிற் பகலவனும், பகற் றொடக்கத்தில் மதியும் புறங்காட்டி மறையும். (3) ஒடுங்கா உள்ளத் தினன் சேரன்; அத்தமலையின்கண் மறைந்து ஒளியும் மண்டிலம். (4) தமிழகம் தனக்கும் பிறர்க்கும் பொது என்ற சொல்லைப் பொறுன் சேரன்; பொழுதின் பகற் பகுதியைப் பகலவனும், இராப்பகுதியை மதியமும் தமதாக்கும். (5) எப்பொழுதும் குறைவற்ற ஈகையோன் சேரன்; இடம் மாறி வருதலின் உத்தராயணம் தக்ஷிணாயணம் இவ்விரண்டினும் ஒருவகையான ஒளியுடையதிலது பகலவன், சுக்கிலபக்கம், கிருட்டிணபக்கம் இவ்விரண்டினும் ஒருமுறையான ஒளியுடையதிலது மதியம் எனக் காண்.[1]

போகம் என்ற சொற்கு அரசியற்றன்மை என்ற பொருள் கொள்ளுவது சாலும். வடமொழியில் அப்பொருள் உண்டு. அவ்வாறாயின் 'பொதுச்சொற் பொறாஅது வையங்காவலர் வழிமொழிக் தொழுகப் போகம் வேண்டி' என்பது அந்நுவயமாகும். ஆகவே பொதுச்சொல் என்பதற்கு (நிலம்) பொதுவென்ற சொல் என்பது பொருளாம். போகம் என்பதற்கு இன்பநுகர்வு என்றும், பொதுச் சொல் என்பதற்கு இழிசொல் என்றும் பொருள்கொண்டனர் பேராசிரியர். அன்றியும், அவர் 'பொறாஅது' என்ற பாடங்கொள்ளாது பெறாஅது என்ற பாடங்கொண்டனர் என்பது 'முற்றாச் சிறப்பில்லாக் கட்டுரை யெய்தான்' என்னுமிடத்து 'எய்தான்' என்றசொல்லான் விளங்கும்.[2] அவ்வாறாயின், பாட்டின் முதலிரண்டடிகட்கும் 'வையங் காவலர் வழிமொழிந்தொழுகவும், போகம்வேண்டிப் பொதுச்சொற் பெறாஅதும்' என்பது பொருளாகும். அப்போது வேண்டி என்பது

[1]

சேரலாதன்.	மண்டிலம்.
இடஞ்சிறிதேனுமூக்கந்துரப்ப	அகலிருவிசும்பினும்
	பகல் விளங்குதி (விளங்கலை)
கடந்தடுதானை	புறக்கொடுத்திறத்தி
ஒடுங்கா வுள்ளம்	மலைமறைந்தொளித்தி
பொதுச்சொற் பொறாஅது	பொழுதென வரைதி
ஓம்பா வீகை	மாறி வருதி.

[2] இதனை எனக்குக் கூறியது என் நண்பருள் ஒரு பெரியார்,

காரணப்பொருளை உணர்த்தும் வினையெச்சமாகிப் பெறுஅது என்பதைத் தழீஇ நிற்கும். 'பகல் விளங்கலை' என்ற பாடங்கொண்டு மண்டிலம் என்பதற்கு மதி என்று பொருள்கூறினர் பேராசிரியர்: 'பகல் விளங்குதி' என்று கொண்டு மண்டிலம் என்பதற்குப் 'பகலவன்' என்று பொருளுரைத்துப் பேராசிரியர்கூறியதைப் பிறர்மதமாகக்கூறினர் புறநானூற்றுரைகாரர்.

அரசன்றன்மைகூறும் ஒவ்வொருதொடருக்கும், மண்டிலத்தன்மை விளக்கும் ஒவ்வொரு தொடருக்கும் முறையே மண்டிலத்திற்கும் அரசனுக்கும் பொருந்துமாறு குறிப்புப்பொருளுணர்த்தினர் பேராசிரியர்.

அகலிருவிசும்பினும் என்றவிடத்து உம்மை இருத்தலானும், அரசன்றன்மை கூறுமிடத்து உம்மையில்லாமையானும் இடஞ்சிறிதேனும் என்பது இடஞ்சிறிதேனும்[1] என்றிருப்பின் நலமென்று தோன்றுகின்றது.

விளங்கலை, விளங்குதி என்ற இருபாடங்களையும் நோக்குமிடத்து இந்தச்செய்யுளை யியற்றிய ஆசிரியரே ஒருகால் ஒருபாடத்துடனும் மற்றொருகால் மற்றொருபாடத்துடனும் இச்செய்யுளைப் பாடினரோ என்றும், அவ்வாறாயின் சோழர்குலத்தலைவனான பகலவனும், பாண்டியர் குலத்தலைவனான மதியமும் சேரலாதனுக்கு ஒப்பாகாமையின், அவர் வழித்தோன்றல்களும் ஒருகாலும் ஒவ்வார் என்ற குறிப்புப்பொருள் அவர் உள்ளத்தில் இருந்ததோ என்றுங் கருத இடமுண்டாகின்றது.

விசும்பினும் என்றவிடத்து ஆன் உருபு ஏழாம்வேற்றுமைப் பொருளில் வந்தது.

போகம், தானை, மண்டிலம் என்ற மொழிகள் முறையே ஹோமம், ஸேநா, மண்டல: என்பவற்றின் தற்பவம்.

௪ ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

[1] இடஞ்சிறிதென்னும் என்றவிடத்து இடஞ்சிறிதெனினும் என்றிருத்தல் கூடுமோ வென்று என் நண்பர் பெரியாருள் ஒருவருடன் ஆய்ந்தபோது, இடஞ்சிறிதேனும் என்றிருந்திருக்கலாம் என்றனர்.

மெம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
வறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்று
மெங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி அறப்போர் முறையினின்றும் அணுவளவும் மாறாது வெற்றிபெற்றதைக்கூறி, அவன் பல்லாண்டுவாழ்க என்று இச் செய்யுளில் வாழ்த்தினர் நெட்டிமையார்.

பெருவழுதி போர்புரிவதற்குமுன் பகையரசது ஆவினையும் ஆ போன்ற பிராமணர்களையும், மகளிரையும், பிணியுடையாரையும், மகப்பேறு பெறாதாரையும் அரண்சேரக் கூறுதலை நோக்குமிடத்து, அவர் காலத்து நாட்டின் நாகரிகம் எங்ஙனம் இருந்தது என்பது நன்கு விளங்கும்.

பார்ப்பனமாக்கள் என்பதற்கு ஆனியல் என்ற அடைமொழி எற்றுக்கு எனின், பிறர் குறைவின்றிவாழவேண்டுமென்றே கடவுளைப் போற்றித்[1] தமக்கு விதித்த அறுதொழிலையுந் தவறாது நடாத்தி ஆனைப் போன்று பிறர்நன்மைக்கே உலகில் வாழும் அந்தணர்களைக் குறித்தற்கு என்னலாம். ஆகவே, அரசர் வணிகர் முதலினோரின் தொழில் புரியும் அந்தணர்கள் ஈண்டுக் குறிக்கப்பட்டிலராகும். மக்கள் ஆறறிவினரென்றும் மாக்கள் ஐயறிவினரென்றும் ஆசிரியர் தொல்காப்பியனார் மரபியலிற் கூறியிருக்க, ஈண்டு நெட்டிமையார் மாக்கள் என்று கூறியிருப்பாரா என்று ஓராராய்ச்சி தோன்றுகின்றது. மக்களென்பதன் நீட்டலெனின், மாக்களென்பதற்கு மக்களென்பதன் பொருளினும் மாறான பொருளிருக்க, அவ்வாறு அவர் வழங்கார். அவ்விருசொற்கட்குமுள்ள வேறுபாடு மறைந்தகாலத்தில் இச்செய்யுளைப் பாடினரெனின், தொல்காப்பியத்திற்கு வெகுகாலம் பிற்பட்டது இச்செய்யுளென்று கூறல்வேண்டும்.

---

[1] லோகாஸ்ஸமஸ்தாஃ ஸுகிநோ பவந்து.

தென்புலவாழ்நர் என்பதற்குப் பிதிரர்[1] என்பது பொருளாகும். அவர் தெற்கில் வாழ்கின்றனரென்பது யஜுர்வேதத்துத் தைத்திரீய சாகை[2] முதலியவற்றால் விளங்கும். நம் முன்னோர் எப்பிறப்பினராக இருப்பினும் நாம் பிதிரர்களுக்குச் செய்யுஞ் சடங்கின் பயனை அவர்க்குத் தக்கபடி உணவாக மாற்றி அவரிடஞ் சேர்ப்பிக்கின்றனர் பிதிரர் என்பது மிருதிநூலார் கொள்கை.

பேணி என்ற சொல் போற்றி என்ற பொருள்படுமென்பது 'அமரர்ப்பேணியும்.........' (புறநா. 99) என்றவிடத்து உரையான் விளங்கும்.

'தங்கோச் செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த', 'முந்நீர் விழவின்', 'நன்னீர்ப் பஃறுளி' என்றவற்றான் முறையே பெருவழுதியின் முன்னோனது ஈகையும், அவன் விழவுசெய்ததும், பஃறுளி என்ற ஆற்றை வெட்டுவித்ததும் அறியப்படுகின்றன.

பல என்ற சொல் பலஆண்டுகள் என்ற பொருளைக் குறிக்கும். அஃது ஏழாம்வேற்றுமையுருபுதொக்குநின்ற சொல்லாகும்.

ஆவும் மாக்களும் என்றவிடத்து உயர்திணையும் அஃறிணையும் விராய் எண்ணுதல் 'உயர்திணை மருங்கினும்......' (தொல். சொல். 48) என்ற சூத்திரத்தாற் கொள்ளுகின்றனர் தெய்வச்சிலையார்.

பஃறுளி என்பது பல் துளி என்ற சொற்களாலாகிய சொல். பல் + துளி என்பது பஃறுளி என்றும் பற்றுளி என்றும் ஆகலாம்.

அல்வழி யெல்லா முறழென மொழிப. (தொல். எழுத். 369.)
தகரம் வரும்வழி யாய்த நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே. (தொல். எழுத். 370)

என்பன காண்க. ஈண்டு ஆய்தத்தின் ஒலி றகரத்தின் ஒலியைச் சற்று ஒத்திருக்கும். அவ்வாறே ககரம், சகரம், டகரம், தகரம், பகரம் இவற்றிற்குமுன்னுள்ள ஆய்தமும் முறையே அவ்வவற்றின்பின்னுள்ள வல்லெழுத்தொலியை ஒத்து ஒலிக்கும். இவ்விடயம்,

---

[1] cf. குறள், 43, பரிமேலழகர் உரை.

[2] தேவமநுஷ்யா திஶோ வ்யபஜந்த ப்ராசீம் தேவா தக்ஷிணாம் பிதர: ப்ரதீசீம் மநுஷ்யா உதீசீம் ருத்ரா: (தைத்திரீய ஸம்ஹிதா 6 ஆவது காண்டம், 1, 1.)

சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவென (தொல். எழுத். 101) என்ற தொல்காப்பியச் சூத்திரத்தான் விளங்கும். இப்போதும் வடமொழியில் கஃ கரோதி (க:கரோதி), கஃ பசதி (க:பசதி) என்ற விடங்களில் ககரத்திற்கு முன்னுள்ள விஸர்க்கத்தின் ஒலிக்கும், பகரத்திற்குமுன்னுள்ள விஸர்க்கத்தின் ஒலிக்கும் உள்ள வேற்றுமை இங்கு ஒப்பிட்டறியத்தக்கது.

பார்ப்பனன், அரண் என்பன முறையே ப்ராஹ்மண:, ஶரணம் என்பவற்றின் தற்பவம். கடன், அறத்தாறு என்பன முறையே ருணம், தர்ம-மார்க: என்பவற்றின் மொழிபெயர்ப்பு.

10 வழிபடு வோரை வல்லறி தீயே
... ...
நீமெய் கண்ட தீமை காணி
னொப்ப நாடி யத்தக வொறுத்தி
... ...
தண்டமுந் தணிதி நீ......
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
... .

சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி தன்னை வழிபடுவோரின் உள்ளக்கருத்தை நன்கு அறிந்தும், குறளைமொழிகட்குக் காது கொடாமலும், தீமைபுரிந்தோனை அத்தீமைக்குத்தக ஒறுத்தும் தீங்குபுரிந்தோன் அடைக்கலம்புகின் அவன் குற்றத்தைப்பொறுத்தும், இனிய உணவை வந்தோர்க்கு மனமார்ந்து அளிக்கும் மனையாளொடு கூடியும், வேற்றரசரால் வெல்லப்படாமலும், பின்னர் வருந்தாது முன்னரே ஆய்ந்து வினைகளைச்செய்தும், புகழை எங்கும் பரப்பி விளங்கியிருந்தனன் என்று ஊன்பொதிபசுங்குடையார் அவனைப் புகழ்ந்தனர்.

அறிதி என்பது அறிதீ என நீண்டது.

அத்தக என்பதற்கு அதற்குத் தக்கவாறு என்பது பொருள் ஆகலின் அதற்கு, தக என்பன அத்தக என்றாயிருத்தல்வேண்டும்.[1] 'அ' என்ற சுட்டு வினையெச்சத்துடன் கூடி ஒருசொல்லாய் வழங்கப்பட்டது நோக்கற்பாலது.

[1] cf. அதற்குத்தக வொறுத்தல் (குறள். உரைப்பாயிரம்.பரிமேலழகருரை.)

தண்டம் அமிழ்து என்பன முறையே தண்ட:, அம்ருதம் என்ற சொற்களின் தற்பவம்.

11. "பாடினிக்கு.........பாண்மகன் என்பது அதுவெனுருபு கெடக் குகரம் வந்தது; உயர்திணையாகலின்" என்றனர் புறநானூற்றுரைகாரர். ஆகலின்,

அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயின்
அதுவெ னுருபுகெடக் குகரம் வருமே. (தொல். சொல். 94)

என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறிய பொருளைத்தான் கொண்டனர் என்பது வெளிப்படை. அவர் வேறு சில இடங்களிற் சேனாவரையர்கொள்கையைப்பற்றினர் என்பது பின்னர்வரும் புறப்பாட்டுக்களுள், காட்டப்படும்.

13. இவன்யா ரென்குவை யாயின்
... ...

'இவன் யார்' என்றவிடத்து இவன் என்பது சோழனைக் குறிக்கின்றது என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்தது. ஆகலின் அது படர்க்கைச்சொல்லேயாகும். அவ்வாறிருக்க, அதனை முன்னிலைப் படர்க்கையென்றுகூறி அவ்வாறுள்ள வழக்கைத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்து இறுதிச்சூத்திரத்தா னமைக்கவேண்டுமென்று நச்சினார்க்கினியர் கூறுவது எற்றுக்கு என்பது விளங்கவில்லை.

14 கடுங்கண்ண கொல்களிற்றாற்
காப்புடைய வெழுமுருக்கி
....
முன்புதுரந்து சமந்தாங்கவும்
....
பாய்மா வியக்கிப் பரிமா வூர்ந்து (?)
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
....
வலிய வாகுநின் றாடோய் தடக்கை
புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு.... ....
....

சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன் பகையரசரின் கணையமரத்தை அழிக்குமாறு கொல்களிறுகளைச் செலுத்துதலாலும், மேம்பட்ட குதிரைகளை அகழ்களில் விழாது நிறுத்துதலாலும், புறத்தினுள்ள அம்பறாத்தூணியிலிருந்து அம்புகளை வில்லினின்று எய்தலாலும், பரிசிலர்க்கு மிகுதியாய் அளித்தலாலும், அவன் கை வலியவாய் உள்ளனவென்றும், சிறந்த உணவை உண்ணுதலையன்றி வேறுவினைசெய்யாத தன் கைகள் மெல்லியவாயிருந்தன என்றும் கூறினர் கபிலர்.

ஈண்டு 'ஊன்றுவை கறிசோறுண்டு' என்னுமிடத்து உண்டல் பொதுவினையாகாதென்று இளம்பூரணரும், 'உண்டலென்பது உண்பன தின்பனவெனப் பிரித்துக்கூறும்வழிச் சிறப்புவினையாம்: பசிப்பிணிதீர நுகரப்படும்பொருளெல்லாம் உணவெனப்படுமாகலிற் பொதுவினையுமாம். கறியொழித்து ஏனையவற்றிற்கெல்லாம் உண்டற்றொழிலுரித்தாகலின் 'பன்மைபற்றிக் கூறினரேனினு மமையும்' என்று சேனாவரையரும், 'கறிசோறுண்டு என்றவழி உண்டு என ஒருவினையான் வந்ததாலெனின் அது பொதுவினை எனக் கொள்க', என்று தெய்வச்சிலையாருங் கூறினர். அதனைப் பொதுவினையாகவேகொண்டு 'அடிசில் உண்டார்' என்ற உதாரணங்காட்டினர் நச்சினார்க்கினியர். ஈண்டுப் புறநானூற்றுரைகாரர் 'உண்டென்பது பொதுவினையன்றேனும் கறியொழிந்தவற்றிற்கெல்லாஞ் சேறலின், பன்மைபற்றி அமைத்துக்கொள்ளப்படும்;... இதனைப் பொதுவினை யென்றுரைப்பாருமுளர்' என்றனர். இவற்றை நோக்கின் புறநானூற்றுரைகாரருக்கு 'உண்டல்' என்பதை இளம்பூரணர்போல் பொதுவினையாகக்கொள்ளாது, சேனாவரையர்போல் பன்மைபற்றிய வழக்கால் அமைப்பதே கருத்தென்பதும், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் இவ்விருவர்போலப் பொதுவினையாகவே கொள்ளுதல் தம் கருத்தன்றென்பதும் விளங்குகின்றன. ஆகலின் இவர் சேனாவரையர் நச்சினார்க்கினியர்காலத்திற்குப் பிற்பட்டவர்போலும்.

சமம் என்பது ஸமஃ என்பதின் தற்பவம், சாபம் என்பது சாபஃ என்பதின் தற்சமம். தாடோய் தடக்கை என்பதும் ஆஜாநுபாஹுஃ என்பதும் ஒருபொருட்கிளவி.

[தொடரும்]

ஸ்ரீ:

பரிசோதனத் தொடர்.

செந்தமிழிலே பரிசோதனத்தொடர் என்ற தலைப்பின்கீழ்ப் பத்திராசிரியரவர்களாலும் பிறராலும் பல அரிய பொருளுரைகள் தொடர்ச்சியாய் வெளியிடப்பட்டுவருதல் கற்றார் பலரும் அறிவர். அம்முறையில் யான் அறிந்த சிலவற்றை இதுபொழுது வெளியிடலானேன். இதிலுள்ள 'குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல், கற்றறிந்தமாந்தர் கடன்.

[1. சிதம்பரப்பாட்டியல்.]

இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாகவெளியிடப்பட்டதும் அழகிய விருத்தப்பாக்களாற் செய்யுளிலக்கணத்தைத் தெளிவாக விரித்துரைப்பதுமான இந்நூலின் முதற்பதிப்பிலே உறுப்பியலின் முதற்செய்யுளினுவல்பொருள்,

"'பூமேவு..............பகர்ந்திடுவேன்யான்' என்றது வணக்கம்; 'வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச் சிறப்பென்னும் பாயிர மாம்'"

என்று பதிக்கப்பட்டுளது; இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்திலுள்ள ஏட்டுப்பிரதியிலும் அவ்வாறே காணப்படுகிறது.

ஆயினும், வணக்கம் அதிகாரம் என்ற இரண்டுங் கூறும் அம்முதற்செய்யுள் முழுவதையும் 'பூமேவு............பகர்ந்திடுவேன் யான்' என்று அடக்கிவிட்டு, "'பூமேவு........பகர்ந்திடுவேன் யான்' என்றது வணக்கம்" என்று வணக்கமொன்றனைமட்டும் நுவல்பொருளாகக் கூறுவது அம்முதற்செய்யுளோடும், நுவல்பொருள்கூறும் உரைப்பத்தியினிறுதியிலுள்ள மேற்கோட்சூத்திரத்தோடும் பொருந்தாததாயும், மேற்கோட்சூத்திரம் முடிக்குஞ்சொல்லை அவாவியதாயும் இருத்தலால், நுவல்பொருள்கூறும் அவ்வுரைப்பத்தியை,

"'பூமேவு......................பகர்ந்திடுவேன்யான்' என்றது (தற்)சிறப்பு. 'வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிர மாம்' என்றாராகலின்" என்று திருத்திக்கொள்ளுதல் அமைவுடையதாம்.

அன்றி, "'பூமேவு..................சிந்தைதனில்வைத்து' என்றது வணக்கம்; 'பாட்டியலை..................பகர்ந்திடுவன் யான்' என்றது அதிகாரம்; 'வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச், சிறப்பென்னும் பாயிர மாம்' என்றாராகலின்" எனத் திருத்திக்கொள்ளினும் அமையும்.

இன்னும், இந்நூலின் இருபதாம்பக்கத்திறுதியில்,

"இன்னுமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
முன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னோடு"

என்றொரு செய்யுட் பகுதியும், 21-ம் பக்கத்தொடக்கத்தில்,

"ஞேற்றுத் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியார் கண்"

"இஃ தைந்தடியான்வந்த ஒருவிகற்பப் பஃறொடைவெண்பா" என்றொரு செய்யுட்பகுதியும், அதன்கீழ்க் குறிப்பும் காணப்படுகின்றன.

20-ம் பக்கத்திறுதியிற் காணப்பட்ட செய்யுட்பகுதியும் 21-ம் பக்கத் தொடக்கத்துள்ள செய்யுட்பகுதியும் சேர்ந்து ஐந்தடியாயினும், அவை, பொருட்டொடர்புடையவாயின்மையானும், அவற்றுள் 20-ம் பக்கத்திறுதிச் செய்யுட்பகுதி நான்மணிக்கடிகையின் 15-ம் செய்யுளின் முற்பகுதியாயும், 21-ம் பக்கத்தொடக்கத்துள்ள செய்யுட்பகுதி வேறொரு தனிப்பாடலின் பிற்பகுதியாயும் காணப்படுதலானும், (17-ம் பக்கத்துச்) செய்யுளியலின் முதற்செய்யுளில், பாவும் இனமும் வெண்பாவின் வகையும் அவற்றின் இலக்கணமும் கூறியமுறையே உதாரணங் காட்டிவந்தவர், ஒருவிகற்பத்தால்வந்த இன்னிசைவெண்பாவுக் குதாரணங்காட்டியபின் பலவிகற்பத்தால்வந்த இன்னிசைவெண்பாவுக் குதாரணங்காட்டி, அதன்பின்பே பஃறொடைவெண்பாவுக் குதாரணங் காட்டல் முறையாதலானும், 20-ம் பக்கத்திறுதிச் செய்யுட்பகுதிக்கும் 21-ம் பக்கத்தொடக்கத்திலுள்ள செய்யுட்பகுதிக்குமிடையே சிலவரிகள் பதிப்பிடுங்கால் தவறிவிடப்பட்டிருக்கவேண்டுமென்று கருதி இச் சங்கத்திலுள்ள சிதம்பரப்பாட்டியலுரை யேட்டுப்பிரதியையெடுத்து நோக்கியதில் அதில் ஷை 20-ம் பக்கத்திறுதிக்கும் 21-ம் பக்கத் தொடக்கத்துக்கும் இடையே இருக்கவேண்டிய பகுதி காணப்பட்டது. அது,

(தன்னொடு) "'செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளிவிடல்'

இஃ தடிதோறும் ஒரூஉத்தொடையின்றிப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா.

'இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றம்.'

இஃ திருவிகற்பத்தால்வந்த இன்னிசைவெண்பா. பிறவுமன்ன.

'சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்போற்' " (றேற்றம்)

என்பதாம்.

மேற்காட்டியபகுதி செய்யுளியலின் முதற்சூத்திரத்திற் கூறியவாறு உதாரணங்களை முறைப்படுத்திக் காட்டியதாயிருத்தலானும், அதனுள், 'செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது, வேண்டின் வெகுளிவிடல்' என்பது மேற்குறித்த நான்மணிக்கடிகையின் 15-ம் செய்யுளின் பிற்பகுதியாயும், 'சேற்றுக்கால் நீலம் ... ... கயல்போற்' (றேற்றம்) என்பது மேற்குறித்த தனிப்பாடலின் முற்பகுதியாயும் அமைதலினாலும், அவற்றின் கீழ்க்குறிப்பும் பிறவும் பொருந்தியவாயமைதலினாலும், சிதம்பரப்பாட்டியலின் முதற்பதிப்பு 20-ம் பக்கத்திறுதிக்கும் 21-ம் பக்கத் தொடக்கத்துக்கும் இடையே மேற்காட்டியவற்றைச் சேர்த்தெழுதிப் படித்துக்கொள்வதே அமைவுடையதாம்.

[2. பிங்கலந்தை]

நிகண்டுகளிற் றொன்மையும் பெருமையும் வாய்ந்தது பிங்கலந்தையென்பது தமிழறிஞர் துணிவு. அது பலராலும் பலமுறை பதிக்கப்பட்டுளது. அவற்றுள் ஸ்ரீ சிவன்பிள்ளையவர்கள்பதிப்பிற் சுழல்காற்றின்பெயர் கூறுவதாகிய வான்வகையில் 30-வது சூத்திரம்,

"சூறை வளியே சுழன்றெழு காற்றே"

என்று பதிக்கப்பட்டு, அதன் உரை,

"சுழல்காற்றின்பெயர்:—சூறை, வளி"

என்று காட்டப்பட்டிருக்கிறது.

இவ்வுரை, சூறை, வளி எனச் சுழல்காற்றுக்கு இரண்டுபெயருண்டென்று கொள்ளும்படி அமைந்திருக்கிறது.

தமிழ்ச்சங்கத்தார் வெளியிட்ட தமிழ்ச்சொல்லகராதியில் வளி என்ற சொற்குச் சூறாவளி யென்று பொருளெழுதி, அதற்கு மேற்கோளாக மேற்குறித்த பிங்கலந்தைச் சூத்திரமே காட்டப்பட்டுளது.

திவாகரம், சூடாமணிநிகண்டு, உரிச்சொனிகண்டு, அகராதி நிகண்டு முதலியவற்றுள் சுழல்காற்றின்பெயர் கூறுமிடத்து வளியென்பது படிக்கப்படவில்லை. அன்றியும், ஒருசொற் பல்பொருளில் வளியென்பதன் பொருளுரைக்குமிடத்தேனும் வளி—சுழல்காற்றென்று படிக்கப்படவில்லை மேலும், பிற இலக்கியங்களிலும் வளியென்பது சூறை (சுழல்காற்று) என்ற பொருளிற் பிரயோகிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆகலால், ஷை 30-ம் சூத்திரவுரையை, 'சுழல்காற்றின்பெயர்:— 'சூறைவளி.' என்று ஒருபெயராகவே திருத்திக்கொள்வது பொருத்தமுடைத்தென்று தோன்றுகிறது.

சூறைவளி—சூறையாகிய காற்று. சூறைவளியென்பது சுழல் காற்றின் சிறப்புப்பெயராகிய சூறை யென்பதும் காற்றின்பொதுப் பெயராகிய வளியென்பதும் சாரைப்பாம்பு என்பதுபோல இருபெயரொட்டாய் இணைந்துநின்றது. இவ்வாறு (சூறைவளி என) வழங்கல் மரபென்பது 'சூறைவளியிடைச் சுழலிலைபோல' (பெருங்கதை 4வது வத்தவகாண்டம், பந்தடிகண்டது அடி 200.) என்பதனாலும் உணரப்படும். இது சூறாவளி யெனவும், சிறப்புப்பெயர்மாத்திரையிற் சூறை யெனவும் வழங்குவது முண்டு.

